9

# எங்கள் தமிழ்மொழி

“தமிழுக்கு அமுதென்று பேர்.” என்றார் கவிஞர் பாரதிதாசன். தமிழ் என்றால் இனிமை, தூய்மை, அன்பு, அமிழ்தம் என்று பொருள்படும்.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால், ‘முத்தமிழ்’ என்று வழங்கப்படுகின்றது. தமிழ் மன்னர் நல்லாட்சி செய்தனர்; புலவர்களை ஆதரித்தனர்; மக்களை நேசித்தனர். அதனால் ஏராளமான நூல்கள் பிறந்தன.



இசைக் கருவிகள்



நடனத் தோற்றம்

இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைக் காட்டின. சங்க நூலான புறநானூறு சகவாழ்வைக் காட்டுகிறது.

***‘யாதும் ஊரே யாவருங் கேளிர்’*** (புறநானூறு)

எல்லாருக்கும் எல்லா ஊர்களும் சொந்த ஊர்களே. எல்லாரும் நண்பர்களே என்பதுதான் அதன் பொருள். தமிழில் அறநூல்கள் பல உண்டு. திருக்குறள் அன்பு, நேர்மை, உண்மை போன்ற நல்ல பண்புகளை எடுத்துக்காட்டுகிறது.

இந் நூல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பிறமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழியில் ஐம்பெருங் காப்பியங்கள் எழுதப்பட்டன. சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன அவை. மணிமேகலை, குண்டலகேசி என்பன பௌத்த மதக் காப்பியங்களாகும். Edwin Arnold எழுதிய 'Light of Asia' என்ற நூல் புத்தபகவானின் வரலாற்றைக் கூறுகிறது. கவிமணி இதனை 'ஆசியஜோதி' என்று தமிழில் பெயர்த்தார். இதுபோன்ற நிறைய பௌத்த நூல்கள் தமிழில் உள்ளன.

தமிழ்மொழி இலங்கை இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் வழங்கப்படுகிறது. தமிழர் விருந்தோம்பும், பண்பும், நயத்தக்க நாகரிகமும் உடையவர்கள். எல்லா நாட்டு, இன, மத, மொழி மக்களோடும் சேர்ந்து வாழ்பவர்கள். இன்று ஒரு சர்வதேச சமூகமாக வாழ்கிறார்கள். தமிழர் தமது பண்பாடு, மொழி என்பனவற்றைப் பேணி வாழ்கிறார்கள்.

சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையே பொதுவான பல சொற்கள் உண்டு. அம்மா, அக்கா, மாமா, கண்ணாடி, பிட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே கலாசார ஒற்றுமையும் உண்டு. உணவு, உடை, வழிபாட்டு முறைகளில் ஒற்றுமையைக் காணலாம்.

சித்திரை வருடப் பிறப்பு இரு இனத்தவராலும் ஒரே தினத்தில் கொண்டாடப்படுகிறது. பின்வரும் பாடல் தமிழ் மொழியின் சிறப்பைக் கூறுகிறது.

## தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே!

**சுப்பிரமணிய பாரதியர்.**

**பாடலின் பொருளைக் கூறுங்கள்.**

**பாடலை இசையுடன் பாடுங்கள். அரும்பதங்களுக்கு அகராதியின் துணைகொண்டு பொருள் காணுங்கள்.**

**தமிழிலுள்ள காப்பியங்கள் ஐந்தினைக் குறிப்பிடுங்கள்.**

**மணிமேகலை, குண்டலகேசி பற்றித் தெரிந்தவரை எழுதுங்கள்.**

## மரபுப் பெயர்கள்

எம் முன்னோர் ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒரு சொல்லைப் பயன்படுத்தினர். அச் சொல் தொன்று தொட்டு வழங்கி வருகிறது. அவ்வாறு வழங்குவது மரபு ஆகும்.

பல பிராணிகளினதும் இளமைப் பெயர்களைக் குறிப்பிடுவதற்கு மரபுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

அவற்றுள் ஒன்று குஞ்சு.

அணிற் குஞ்சு
காக்கைக் குஞ்சு
கிளிக் குஞ்சு
குருவிக் குஞ்சு
கோழிக் குஞ்சு
தவளைக் குஞ்சு
மீன் குஞ்சு

இதைவிடப் பயன்படுத்தப்படும் இன்னொரு மரபுப் பெயர் குட்டி.

ஆட்டுக் குட்டி
கரடிக் குட்டி
சிங்கக் குட்டி

இப்போது நாங்கள் உடல் உறுப்புகள் தொடர்பான சில மரபுத் தொடர்களை அறிந்து கொள்வோம்.

| மரபுத் தொடர் | | மரபுத் தொடரின் பொருள் |
|---|---|---|
| ✯ தலை தடவுதல் | - | ஏமாற்றுதல் |
| ✯ முகம் கோணுதல் | - | வெறுப்புக்குறி காட்டுதல் |
| ✯ கண் வளர்தல் | - | நித்திரை செய்தல் |
| ✯ நாக்குப் புரளுதல் | - | சொன்ன சொல் தவறுதல் |
| ✯ வாய் காட்டுதல் | - | எதிர்த்துப் பேசுதல் |
| ✯ பல்லிளித்தல் | - | பல்லைக்காட்டிக் கெஞ்சுதல் |
| ✯ செவிசாய்த்தல் | - | இணங்கிக் கேட்டல் |
| ✯ கழுத்தறுத்தல் | - | ஏமாற்றுதல் |
| ✯ தோள் கொடுத்தல் | - | உதவி செய்தல் |
| ✯ கை கோத்தல் | - | நட்புச் செய்தல் |

**பின்வரும் மரபுத் தொடர்களையும்,அவற்றின் பொருள்களையும் பொருத்துங்கள்.**

| | |
|---|---|
| 1. முகம் கோணுதல் | நித்திரை செய்தல் |
| 2. கண்வளர்தல் | சொன்ன சொல் தவறுதல் |
| 3. நாக்குப் புரளுதல் | வெறுப்புக்குறி காட்டுதல் |
| 4. தோள் கொடுத்தல் | இணங்கிக் கேட்டல் |
| 5. செவி சாய்த்தல் | உதவி செய்தல் |

**பின்வரும் பிராணிகளுக்கு வழங்கிவரும் மரபுச் சொற்களை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவு செய்யுங்கள்.**

1. ஆடு (குஞ்சு / குட்டி)
2. கிளி (குஞ்சு / குட்டி)
3. மீன் (குஞ்சு / குட்டி)
4. சிங்கம் (குஞ்சு / குட்டி)
5. தவளை (குஞ்சு / குட்டி)

## செயற்பாடு

**எமது நாடு**

- ✯ இலங்கை எங்களுடைய தாய் நாடு
- ✯ இலங்கைக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன.
- ✯ இந்து சமுத்திரத்தின் மத்தியில் உள்ளது.
- ✯ ஆலயங்களிலிருந்து மணி ஓசை கேட்கிறது.
- ✯ இலங்கையே! உன் பெருமையே பெருமை !

**மேலே எமது நாடு என்னும் தலைப்பில் உள்ள வாக்கியங்களை உச்சரியுங்கள்.**

**இவ்வாக்கியங்களில் உள்ள வேற்றுமை உருபுகளைக் குறிப்பிடுங்கள்.**